# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீட்டு எண்: 47/2022 நாள் 29.06.2022

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி - I ல் அடங்கிய பதவிகளுக்காக 04.03.2022, 05.03.2022 மற்றும் 06.03.2022 அன்று நடைபெற்ற முதன்மை தேர்வில் தேர்ச்சி பெற்று, 13.07.2022 முதல் 15.07.2022 வரை நடைபெற உள்ள நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்ட தெரிவாளர்களின் பட்டியல் 29.06.2022 அன்று தேர்வாணைய வலைதளத்தில் வெளியிடப்பட்டது. இதன் தொடர்பாக, முகநூல் பக்கத்தில் தேர்வாணையத்தின் செயல்பாடுகளுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் பொய்யான தகவல்கள் பதிவிடப்பட்டுள்ளது. இவ்வினம் குறித்து தொடர்புடைய நபர் மீது பொய்யான தகவலை பதிவிட்டமைக்காக சைபர் கிரைமில் தேர்வாணையத்தால் புகார் அளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதுபோன்ற பொய்யான தகவல்களை தேர்வர்கள் நம்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பி. உமா மகேஸ்வரி இ.ஆ.ப.,
செயலாளர்